# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,472 — 1958 අගෝස්තු 11 වැනි සඳුදා — 11.8.1958

11,472 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 11 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் வி. 49. — உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு வவுனியா மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), செல்லப்பா சின்னத்தம்பி ஆகிய நான் இக்கட்டளையால்—

1. 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 19 ந் திகதியைக் கொண்ட 11,432 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 17 ம் திகதி வி. 48 இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக் கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக் கூடிய சில்லறை விலைகள் முதலியவையைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் 2 ம், 3 ம், 4 ம், 5 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மைசூர்ப் பருப்பு, முழு உளுந்து, கடலைப் பருப்பு முதலியவைகளைக் கொண்ட எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

2. இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம், 4 ம், 5 ம் பகுதிகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக் கூடிய மொத்த விலையாகவும் நிகர-இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடமுறையாய் வருமாறு விதிக்கிறேன்.

வவுனியாக் கச்சேரியில் 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ம் திகதி காலை 9 மணிக்குக் கைஒப்பமிட்டது.

எஸ். சின்னத்தம்பி,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
வவுனியா பகுதி.

### அட்டவணை

| பத்தி 1 | | பத்தி 2 வவுனியா, புதுக்குளம், ஆசிகுளம், கள்ளிக் குளம், ஈரப்பெரியகுளம், மடுகந்தை, நெளுக்குளம் | | பத்தி 3 நாவற்குளம், மருதமடு, இராசேந்திரங் குளம், சூடுவெந்தபுலம், மாமடு வா, உலுக்குளமா, வாழைவைத்த குளம், செட்டிகுளம், கப்பச்சி, பளையவாடி, அனந்தர் புளியங்குளம், கனகரா யன்குளம், மாங்குளம், ஒலுமடு, மருதோடை, நெடுங்கேணி, பழம்பாசி | | பத்தி 4 முல்லைத்தீவு வெள்ளைமுள்ளிவாய்க் கால் | | பத்தி 5 கறுப்பட்ட முறிப்பு, கச்சிலமடு, அம்பலவன் பொக்கணை, புதுக்குடி யிருப்பு, குமுளமுனை, தனி ஊற்று, முள்ளிய வளை, கொக்குத்தொடு வாய், கொக்கிளாய் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிர். | விபரம் | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. | முழு உளுந்து | 49 0 | 0 49 | 50 50 | 0 50 | 52 0 | 0 51 | 53 50 | 0 52 |
| 2. | கடலைப்பருப்பு | 44 0 | 0 44 | 45 50 | 0 45 | 47 0 | 0 46 | 48 50 | 0 47 |
| 3. | மைசூர்ப் பருப்பு | 56 50 | 0 56 | 58 0 | 0 57 | 59 50 | 0 58 | 61 0 | 0 59 |

உணவு விலைக் கட்டளை இல : சி. 275. **உப உணவுப் பொருட்கள்**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொட்டுவே மூகாந்திரம் தர்மசேன ஜயனெத்தி ஆகிய யான் இக்கட்டளையால்—

1. கீழே குறிக்கப்பட்டுள்ள உணவு விலைக் கட்டளைகளை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(அ) 1958 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி வெளிவந்த 11,332 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதியைக் கொண்ட சி. 269 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளை ;

(ஆ) 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 4 ந் திகதி வெளிவந்த 11,411 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 3 ந் திகதியைக் கொண்ட சி. 273 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளை.

2. இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே மொத்த அந்தர் ஒன்றின் இறக்குமதியாளரின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன் ; குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்கு கூடுதலாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் விற்றலாகாது.

3. இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்கு குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும், ஆஞ்ஞையிடுகிறேன் ;

4. இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

5. இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

6. இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

7. இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

8. குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின், அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ந் திகதி மு.ப. 11 மணிக்கு கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

கெ. எம். டீ. ஜயநெத்தி,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

### அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>இறக்குமதியாளரின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| வெண்காயம் (ஈரவெண்காயம் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) | 19 0 | 20 0 | 0 22 |
| கொத்தமல்லி | 39 0 | 40 0 | 0 40 |
| சீரகம் | 117 0 | 118 0 | 1 20 |
| செத்தல் மிளகாய் | 74 0 | 75 0 | 0 75 |
| பாசிப் பயறு | 44 0 | 45 0 | 0 45 |
| முழு உளுந்து | 45 76 | 46 76 | 0 47 |
| கடலைப் பருப்பு | 38 79 | 39 79 | 0 40 |
| மைசூர்ப் பருப்பு | 59 0 | 60 0 | 0 60 |
| ஈர வெண்காயம் | 24 0 | 25 0 | 0 28 |
| உருளைக் கிழங்கு | 28 0 | 29 0 | 0 31 |
| மாசி | 245 0 | 250 0 | 2 50 |
| கடுகு | 69 0 | 70 0 | 0 70 |
| உப்பு | — | — | 0 06 |

**குறிப்பு** :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.